**OS.No.192/2024, Dated 20.03.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 20th day of March 2025.

**வா.சா.2 - ரகு த/பெ ஆனந்தன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பால்சீலிங் வேலை மட்டும் தான் செய்து வருகிறேன். என் தகப்பனார் இறந்துவிட்டார். எனது மனைவியான இவ்வழக்கின் வாதி பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் எதுவும் செய்யவில்லை. தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தாகும். பிரதிவாதி எனக்கு 30 வருடங்களாக பழக்கம் ஆகும். பிரதிவாதி இதற்கு முன்பாக கடன் ஏதாவது வாங்கியுள்ளாரா என்றால் இல்லை. இடத்தை விற்பதற்காக தான் ஒப்பந்தம் போட்டார். தாவா சொத்து மட்டுமே பிரதிவாதிக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். தாவா சொத்தில் விவசாயம் செய்து தான் பிரதிவாதி பிழைக்கிறார் என்றால் எனக்கு அது தெரியாது. பொதுவாக கிரைய ஒப்பந்தம் என்றால் 3 மாதத்தில் இருந்து 6 மாதம் வரை காலக்கெடு நிர்ணயிக்கப்படும் என்றால் எனக்கு அது தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி தான் அவருடைய அண்ணனுடன் பிரச்சனை உள்ளதால் அதை தீர்த்து தரவேண்டும் என்று 2 வருடங்கள் காலக்கெடு நிர்ணயிக்க சொன்னார். தாவா சொத்து பிரதிவாதிக்கு சொந்தமானது என்பதற்கு அவரது தகப்பனார் அவருக்கு எழுதிவைத்த பத்திரத்தை பார்த்தேன். அந்த தான செட்டில்மெண்டு பத்திரத்தை பிரதிவாதி எங்களிடம் தான் கொடுத்துள்ளார். பிரதிவாதி தனக்கும் தனது அண்ணனுக்கும் கிணறு குறித்தும் வழி குறித்தும் பிரச்சனை உள்ளதாக கூறினார். பிரதிவாதிக்கு ஐக்குபந்தி குறிப்பிட்டு தான் சொத்து எழுதிவைக்கப்பட்டுள்ளது. வழியும் கிணறும் மட்டும் பொதுவில் பாத்தியம் என்று எழுதிவைக்கப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தம் எழுதும்போது அதில் கிணறு குறித்தும் வழி குறித்தும் பிரச்சனை இருந்த விபரம் எனக்கு தெரியும். பிரச்சனை உள்ள விபரம் தெரிந்தே தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பிரச்சனையை 2 ஆண்டுகளில் தீர்த்து கொடுப்பதாக கூறினார். நாங்கள் கிரைய தொகையை தயாராக வைத்திருக்கிறோம் என்றும், கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்றும் 2 வருட காலத்திற்குள்

அறிவிப்பு அனுப்பினோமா என்றால ் இல்லை. பிரதிவாதி வாதிக்கு அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் கடன் பொறுப்பிற்காக தான் எழுதப்பட்டது என்று பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. அதற்கு வாதி பதிலறிவிப்பு அனுப்பினாரா என்றும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 1 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் ஹரிபாஸ்கர் மற்றும் விமல்ராஜ் ஆவர். அவர்கள் தவிர வாதி, பிரதிவாதி மற்றும் நான் அங்கு இருந்தேன். நான் அந்த ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போடவில்லை. வா.சா.ஆ 1 ஆவணத்தை பிரதிவாதி தான் சேத்பட் சார் பதிவாளர் அலுவலக அருகில் வைத்து தயார் செய்தார். பிரதிவாதி வா.சா.ஆ 1 ஆவணத்தை பிரதிவாதி தயார் செய்யவில்லை என்றாலும் நானும், வாதியும் தான் தயார் செய்தோம் என்றால் இல்லை. பிரதிவாதி வாதியிடம் ரூ.2,00,000/- அவருடைய அவசரத்திற்காக கடன் கேட்டார் என்றாலும், எனவே, வா.சா.ஆ 1 கிரையம் செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. ரூ.2,00,000/-ற்கு பிரதிவாதி மாதம் ரூ.16,000/- வட்டி செலுத்தி வந்ததால் தான் நாங்கள் 2 வருடத்திற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையான கிரைய ஒப்பந்தம் என்றால் கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்கசொல்லி 2 வருடங்களுக்குள் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் கொரோனா காலம் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. 2021 ஆம் ஆண்டு தான் கொரோனா உச்சத்தில் இருந்தது என்றாலும் 2021 ல் தான் பத்திரப்பதிவு நிறுத்தப்பட்டிருந்தது என்றால் 2019 ன் இறுதியில் இருந்தே கொரோனா காலக்கட்டமாக தான் இருந்தது. ஒரு செண்டு ரூபாய் 1,500/- என்று விலை நிர்ணயித்தோம் அதன் மொத்த அளவு 1 3/4 ஏக்கர் ஆகும். ஒரு செண்டு ரூபாய் 1,500/- வீதம் 175 செண்டு எவ்வளவு வருகிறது என்றால் ரூபாய் 2,60,000/- வருகிறது. கிணறு மதிப்பும் சேர்த்து தான் பேசப்பட்டது. மேற்சொன்ன செண்டு கணக்கில் விலையை கிரைய ஒப்பந்ததில் எழுதவில்லை. கடன் பரிவர்த்தனை என்பதால் தான் செண்டு கணக்கில் விலையை எழுதாமல் பிரச்சனையான இடம் என்றாலும் கடன் பொறுப்பிற்கு என்பதால் வா.சா.ஆ 1 ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஏற்படுத்தபடுவதற்கு முன்பு தாவா சொத்தை அளந்து பார்த்தோம். வில்லங்க சான்றும்

வாங்கிப்பார்த்தோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆரணி நீதிமன்றத்தில் என் பெயரில் பாண்டு வழக்கு ஒன்று உள்ளது. அந்த வழக்கு ஜெகன் என்பவர் பெயரில் உள்ளது. வாதி வழக்கறிஞர் என்பதால் என் பெயரில் வட்டிக்கு பணம் கொடுத்து 3 முதல் 4 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. நாங்கள் வட்டிக்கு பணமும் கொடுத்ததில்லை அதன் பெயரில் காவல் நிலையமும் செல்லவில்லை. ஹரிபாஸ்கர் எனது மனைவியின் தம்பி ஆவார். விமல்ராஜ் பிரதிவாதியின் நண்பர் ஆவார். கடன் பொறுப்பிற்காக எழுதிக்கொடுத்த ஆவணத்தை கிரைய ஒப்பந்தமாக மாற்றி எனது மனைவி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விமல்ராஜ்க்கும் எனக்கும் மற்றும் எனது மனைவிக்கும் முன்விரோதம் எதுவும் இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.